# ஞானப்பிரகாசம்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

க. யாழ்ப்பாணம்:—சாதாரணஞூ பங்குனிமீ. இலக்கம் ௪.


உ
கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறம்தரு தமிழ்த்தெய் வத்தை
யு...ண்ணினேந் தேத்தல் செய்வாம்.

## உபநியாசவாதம்.

பா ...லசந்திரன் உ௰-ம் இலக்கத்திலே
...பநியாசம் ... என்பது பிரசங்கம் என்னும்
பொருளைப் ப... பயப்பது வடநூலார்க்குச் சம்மத மா
துமா? என்று ...வ ஸ்ரீ. அ. க. வைத்தியலிங்க உபாத்
தியாயர் நம்ம ...ம வினவினர். உபநியாசம் என்பது
அப்பொருள் ...பயத்தலை வடநூலுள் யாம் கண்டி
லம். முன்ன ...ர் அச்சொற்கு அப்பொருள் ஆபிதா
னிகங்களில் இ...இல்லையென்று யாம்மறுத்ததும் உண்
மையே. வட...மொழியிலுள்ள பல அகராதிகள்
நோக்கி எழுதப்பட்ட ஸ்ரீமான் கதிரவேற்பிள்ளை அவர்களுடைய அகராதியிலும் அச்சொற்கு அப்பொ ள் கண்டிலம். பின் அச்சொற்கு அங்கே எழுதப்பட்டுள பொருள்களை இங்கே கூறுதும்.

உபநியாசம்:—க அடகு, உ அடுத்துவைத்தல் ௩ கொடுத்தல், ௪ செயற்பாலதிதுவென்று சொல்லுதல், ரு சொல்லத்தொடங்கல், ௬ முகவுரை, எ விதிப்பிரமாணம்.

இப்பொருள்களிலன்றி பிரசாரணம் என்னும் பொருளிலே அச்சொல்லை இப்போது பிரயோகிப்பார் பலர். அப்பொருள் எங்கே கண்டது என்பதனை அவரே கூறற்குரியவர்.

இங்ஙனம்.
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

# ஞானப்பிரகாசம்

## பிரணவம்.

கலைமகள் திருக்கரத்திலே விளங்கும் யாழும் இப்பிரணவமென்று கூறப்படுகின்றது. வடமொழிக்கு ஆதி இலக்கணம், சிவபெருமான் வகுத்தருளிய மகேசுவர சூத்திரங்களாகும். அவைகளுள் "அ இ உண்" என்பது முதற்சூத்திரம். அதில் ணகாரம் அநுபந்தம். மற்றைய மூன்றும் அக்ஷரங்கள். அவைகளுள் முதலிலும் இறுதியிலும் நிற்கும் அக்ஷரங்கள் பிரணவாம்சமென்று

ணர்க. ஆதியிருக்குவேதத்தின் ஆதிமண்டலத்தின் ஆதியநுவாகத்தின் ஆதிமந்திரத்தின் ஆதிபதமாகிய "அக்நி" யின் ஆதியிலும் ஆதிவியஷ்டிப்பிரணவமாகிய "அ" காரம் விளங்காநிற்கும். மீமாஞ்ஸை முதலிய வைதிகசாஸ்திரங்களின் ஆதிசூத்திரங்களின் ஆதிபதமாகிய "அத" வின் ஆதியினும் அவ் அகாரமே விளங்குகின்றது.

தேவாரம் முதல் திருத்தொண்டர் புராணம் இறுதியாயுள்ள பன்னிருதிருமுறைகளின் ஆதியந்தங்களில் முறையே நின்ற "தோடுடையசெவியன்"... "நின்றதெங்குநிலவியுலகெலாம்" என்பவைகளின் முதலிலும் இறுதியிலும் அமைக்கப்பட்ட ஓகார மகாரங்களைச் சேர்ப்ப, ஓம் என முடிந்து, தமிழ் வேதத்தின் பொருள் ஓங்காரப்பொருளேயெனக்காட்டி, சிவபெருமானை உணர்த்தினமை அறிந்து கொள்க.

இன்னும் அகாரம் வடமொழி தென்மொழிகட்கன்றி, பெரும்பாலும் உலகிலுள்ள ஏனைய பாஷைகளுக்கும் ஆதியிலே அமைந்துள்ளது. ஓம் என்பதே "ஆமென்" எனத் திரிபுற்று ஏனைய மதத்தினர் கொள்கைகளிலும் காணப்படுகின்றதென்று கூறுவர் ஒருசாரார்.

அசுத்தமாயையினுமுயர்ந்த சுத்தமாயைக்குமேலே சிவபெருமானுக்கு வியாபகம் கூறப்படுதலால், அவருக்கு அப்பிரணவமிருப்பிடமாயிற்று. அசுத்தமாயைக்குக் கீழே அரிஅயற்குத் தோற்றம் செப்பப்படுதலால், ஏனையதேவர்களுக்கு அது பிறப்பிடமெனப்பட்டது.

அகரம் முதலிய மூன்று அக்ஷரங்களும் முக்காலங்களையும், முக்குணங்களையும், மும்மூர்த்திகளையும், முத்தொழில்களையும், மூன்றக்நிகளையும், இருக்குமுதலிய மூன்று வேதங்களையும், மூன்றவத்தைகளையும், மூன்றுலகங்களையும், உதாத்தம் முதலிய மூன்று சுரங்களையும், விடியன் முதற் கால மூன்றினையும் உணர்த்துமென்றும் அறிந்து கொள்க.

உ

சிவமயம்.

# தமிழ்மொழி.

(கககக-ம் பக்கத் தொடர்ச்சி.

**தமிழின்பாகுபாடு:**—தமிழ்மொ
றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்
று பிரிவினையுடையதாய்த் தொன்றுதொ
ங்கிவரும் பான்மையுடையது. இயற்றமிழென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமும் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதனுள் இலக்கியங்களும் இலக்கணங்களும் அடங்கும். சங்கச்செய்யுள்களும், உரைகளும், புராணம் முதலிய ஏனை நூல்களும் இயற்றமிழேயாம். இயற்றமிழ் ஏனைய இசைத்தமிழ் நாடகத்தமிழ் ஆகிய இரண்டிற்கும் முன்னர்த் தோன்றினமைபற்றி முதற்கண்வைக்கப்பட்டதாகும். ஏனைய இரண்டும் இயற்றமிழின்றி இயங்கும் வன்மையுடையனவல்ல.

இசைத்தமிழென்பது பண்ணொடுகலந்து தாளத்துடன் கூடி இயங்கும் தமிழ்ப்பாட்டுக்களானியன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூலின் தொகுதிகளாம். குழல், யாழ், முழவு முதலிய இசைக்கருவிகளின் பெயர்களும் செவ்வழி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி முதலிய பண்ணின்பெயர்களும் தமிழர்கட்கு அநாதியாய் இசைத்தமிழ் உண்டென்பதை உணர்த்தும்.

நாடகத்தமிழ் என்பது நூலாராய்தற்கு அவ
மில்லாத பணியாளர்களும், படிக்கத்தெரியாத
களும், உற்றுநோக்கி நல்லுணர்வையடையும
வகுக்கப்பட்டது. இயற்றமிழும் இசைத்தமி
சேர்ந்தவழியே நாடகத்தமிழ் பிறந்த தெனி
முன்னைய இரண்டும் கேள்வியின்பம் மட்டுமே ப
பனவாய் நின்றன. நாடகத்தமிழோ கேள்விய
பத்தோடு காட்சியின்பமும் பயக்கின்றது. ந
கம் என்னும் சொல் வடமொழியா தலை நோக்
தமிழர்கள் ஆரியரோடு கலந்த பின்னரே நாட
தமிழ் உண்டாயிருத்தல் வேண்டுமென்பது சி
கொள்கை. அக்கொள்கை தவறுடைத்தென்
தைப் பண்டைக்காலந் தொட்டுத் தமிழர்க்குரி
கூத்தின் விகற்பங்களை விரித்துக் கூறும் சிலப்ப
காரம் அரங்கேற்றுகாதையே வலியுறுத்தும்.

**தமிழ்மொழியின் நெடுங்கணக்கு**:—தமிழ் மொழியின் நெடுங்கணக்கு மிகவும் அழகுபெற அமைந்துளது. ஏனைய பாஷையிலுள்ள எழுத்துக்களைப்போலல்லாமல் வலம்படச் சுழித்தெழுதும் மாண்பு இத் தமிழ்மொழி யொன்றற்கே உரிமையானது. ஒரே எழுத்துக்குப் பல ஒலியில்லை. ஓரொலிக்குப் பலவெழுத்து வேண்டா. கூட்டெழுத்துக்கள் கிடையா. "மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி" என்னும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரச் சூத்திரமும் இதனை வலியுறுத்தும். எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. மொழிக்கு இறுதியில் எல்லா எழுத்துக்களும் வாரா. எல்லா எழுத்துக்களும் மொழிக்கு இடையில் மயங்கா.

**தமிழிலக்கம்**:—தமிழ்ப்பாஷையே அநேகபாஷைகட்கு இலக்கங்கொடுத்ததென்பது சிலர்கொள்கை. தமிழ்நாடும் அதன்மொழியும் அநேகம் நூற்றாண்டுகட்கு முன்னரே சிறப்புவாய்ந்திருந்தமையின் எந்நாட்டினரும் தந்நாட்டிற்கு வேண்டும் பொருள்களை யெல்லாம் தென்னாட்டினின்றும் கொள்வாராயினர். வாணிகத்தின்பொருட்டும் இராஜசேவையின்பொருட்டும் யவனர் (Greeks) முதலிய தூரதேசவாசிகள் வந்து தென்னாட்டிற் குடிகொண்டனர். இதனை

"பயனறவறியாயவனரிருக்கையும்
கலந்தருதிருவிற்புலம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறையும்இலங்குநீர்வரைப்பும்"

என்னுஞ் சிலப்பதிகாரக்கூற்றான் பெறுக. வாணிகங் காரணமாக வந்து குடிகொண்ட யவனர் தாம் கொள்ளவேண்டிய பண்டங்களை எல்லாம் நாளடைவில் சேர்த்துப் பொதிசெய்து அப்பொதிகளின்மீது தம்பெயரையும் எண்ணையும் இட்டு பண்டசாலைகளிலே அடுக்கிப் பின்னர் மரக்கலங்கள் மீளும்போது அவற்றிடை எற்றிச் செல்லும் வழக்கம் பூண்டிருந்தனர். இவ்வுண்மையை

"வம்பமாக்கடம்பெயர்பொறித்த
கண்ணெழுத்துப்படுத்தஎண்ணுப்பலபொதி
கடைமுகவாயிலிற்கருந்தாழ்க்காவலும்"

என்னும் சிலப்பதிகாரச் செய்யுள் வலியுறுத்தாகிற்கும். வாணிகம் முதலிய பல முயற்சித்துறைகளில் தமிழர் வல்லுநராய் இருந்தமையின் யவனர் முதலியோர் வந்து வியாபாரஞ் செய்யலாயினர். தமிழர் யவனரோடும் பிறரோடும் வியாபாரம் முதலிய செய்து பொருளீட்டி வாழ அவர்க்கு எண்ணுக்குறி, அளவுக்குறி, நிறைக்குறி முதலியன இன்றியமையாதனவாயின. நமது கைவிரல்களே எண்ணுக்குறிக்கு மூலாதாரம். ஒன்றன்குறி ஒருவிரல், இரண்டன்குறி இருவிரல், மூன்றன்குறி மூவிரல்; ஏனையவும் இவ்வாறேயாம். வாணிபஞ்செய்வதற்கு முக்கியமாகிய இலக்கம் முதலியவற்றின் பெயர்களை யவனரும் பிறரும் தத்தம் தேயங்கட்குக் கொண்டுசென்றனர். இலக்கக்குறிகளின் பெயர்களெல்லாம் தமிழ்மொழியே. இதுவே தமிழர்கள் அநாதியாய் இலக்கக்குறியை யுடையராயிருந்தனர் என்பதற்குப் போதியசான்றும். தமிழ்மொழியில் கீழ்வாய் இலக்கமும் உண்டு. அவற்றின் பெயர்களாய காணி, கால், அரை, முக்கால் என்னும் மொழிகளெல்லாம் தமிழ்மொழியே. தொண்ணூற்றொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களின் பெயரெல்லாம் தமிழ்ப்பெயரே. இவ்வெண்கள் பண்டைத் தமிழ்ச்செய்யுட்களின் கண்ணும் எடுத்தாளப்பட்டிருப்பதை "எட்டுமிரண்டும் இனிதறிகின்றிலர்" என்னுந் திருமந்திரச் செய்யுளடி விளக்கும். தமிழ் இலக்க மொழியின் மரூஉவே தெலுங்குமொழியின் இலக்கம் என்பது சிறிது உய்த்துநோக்குவோர்க்குப் புலப்படாமற் போகாது. ஒன்று என்பதை "ஒகடி" என்றும், இரண்டு என்பதை "ரெண்டு" என்றும், மூன்று என்பதை "மூடு" என்றும் வழங்குவதே போதிய சான்றும். ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலன் என்னும் முகத்தலளவையும், சாண், அடி, முழம் என்னும் நீட்டலளவையும், பலம், வீசை, மணங்கு என்னும் எடுத்தலளவையும் தனித்தமிழே.

**தமிழிலக்கணம்**-தமிழ்ப்பாஷை அநேககாலங்கட்கு முன் இவ்விந்தியநாடு முழுவதும் பரவியிருந்ததெனினும் அதற்கு முதல்முதல் இலக்கணம் வகுத்தார் அகத்தியனாரே. அகத்தியனார்க்கு முன்னரே சில இலக்கணநூல்கள் பரவியிருந்தனவென்றும் அவை யாதுகாரணம்பற்றியோ இறந்தொழிந்தனவென்றும் சிலர் கூறுவர். அகத்தியனார் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிற்கும் இலக்கணம் வகுத்தார். அந்நூலின் சிற்சில சூத்திரங்களே ஆங்காங்குக் காணக்கிடைக்கின்றனவேயன்றி முழுவதும் காண்பதரிதாகிவிட்டது. அகத்தியனார் முதன் மாணாக்கராகிய திரணதூமாக்கினியென்னும் இயற்பெயரையுடைய தொல்காப்பியனார் இயற்றிய இலக்கணமே நின்று நிலவுகின்றது. அவ்விலக்கணநூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றதிகாரங்களையுடையது

எனினும் ஐவகை இலக்கணங்களின் எஞ்சியவாய யாப்பையும் அணியையும் செய்யுளியலிலும் உவமவியலிலும் அகப்படுத்திக் கூறினர். இதற்குப்பின்தோன்றிய இலக்கணநூல்கள் மிகப்பல. அவைகளிற் பல எழுத்தையும் சொல்லையும் கூறுகின்றன. சிலபொருளையே கூறின. சிலயாப்பொன்றையே கூறின. சிலஅணியொன்றையே விளக்கின.

தமிழிற்கென இலக்கணநூல் வேறில்லையெனவும் அது வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியதெனவும் சிலர் கூறுகிற்பர். அற்றன்று; "தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைத்தொகைமுதலிய சில சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகு பாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பாமுதலிய செய்யுளிலக்கணங்களும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று வடமொழி தென்மொழியாகிய இருமொழிக்கடலையும் நிலைகண்டுணர்ந்த ஆசிரியர் சிவஞானயோகிகளின் அருள்வாக்கே தமிழிலக்கணத்தின் பெருமையை நன்குவிளக்கும். தமிழ் இலக்கணம் கூறுவான்போந்த நன்னூலாசிரியராம் பவணந்தி முனிவரும் பதவியலிலும் மெய்யீற்றுப் புணரியலிலும் வடசொல்லாக்கமும் வடசொற்சந்தியும் அழகுபெற விதந்தது ஏனையவெல்லாம் தமிழ்மொழிக்கே உரியன என்பதை வலியுறுத்தும். பொருளதிகாரத்திற்கூறிய அகப்பொருளும் புறப்பொருளும் அதன் துறைகளும் தமிழிற்குரிய சிறப்புவிஷயங்களாம். இவற்றினின்றும் ஆதியிலிருந்த தமிழர்களது ஒழுக்கநிலை இத்தன்மைத்தென்பது நன்கு புலப்படும்.

வரும்.

சே. சிவஞானம்பிள்ளை.

## சிவனடியார் பெருமை.

"தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை யெமையிகழார்—தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமைகேளாம்புறம்".

அன்பேயுருவாய் அமர்ந்த அறிவின் மிக்கீர்! கலைமகள் அவதாரமாகிய ஔவைப் பிராட்டியார் "இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம் தொண்டர்தம்பெருமையைச் சொல்லவும் பெரிதே" என்று கூறியிருத்தலின் அவ்விஷயத்தை எடுத்துச் சொல்லுதல் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய என்போன்றவர்க் கியலாதாயினும்.

"அருளினீர்மைத்திருத் தொண்டறிவரும்
தெருளினீரிது செப்புதற்காமெனில்
வெருளின்மெய்ம் மொழிவானிழல்கூறிய
பொருளினுகு மெனப்புகல்வாமன்றே".

என்னும் பெரியோர் வாக்கைக் கடைப்பிடித்து எனது பேரவா பெருகியெழுதலின் எங்கும் வியாபியாயுள்ள இறைவன் என் உள்ளத்தேநின்று உணர்த்தச் சொல்கின்றேன்.

சிவனடியார்கள் சிவபெருமானது திருவடிகளையே பொருளெனக் கொண்டு அவைகளில் வழிபட்டு ஒழுகுபவர்கள். அத்திருவடிகள் தூலத்தில் பல அரும் விஷயங்கள் அடங்கிய ஸ்ரீ நடராஜப்பெருமானது திரோபவ அனுக்கிரக கிருத்தியங்களைக் காண்பிக்கின்ற திருவடிகள் போன்றும் சூட்சுமத்தில் அவருடைய சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திர்த்துவங்கள் என்று வடமொழியிற் சொல்லப்படுகின்ற எல்லாமுணருந்தன்மை எல்லாஞ் செய்யும் செய்கை ஆகிய குணங்களில் ஆன்மாலயப்படுதல் என்று கொள்வார்கள்.

இப்பேர்க்கொத்த திருவடிகளையடைதற்குச் சாதனம் அவாவறுதலே. இதற்குத் திருவள்ளுவரும்

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்
றைப் பற்றுக பற்று விடற்கு.

என்றார். ஆகவே திருவடியடைந்தாரே சிவனடியார். அவர்கள் சிவமே என்பது சிவஞானபோதம் அடைந்தோர்ப் பேறு கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகிய

"செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ
மாலற நேயமறிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத்தொழுமே".

என்பதனுனும், அதன் பாஷியாதிகளாலும் தெளிவாய் விளங்கும். பின்னும், மெய்கண்டதேவர்க்குச் சூரணக்கொத்தையுபதேசித்தருளிய பொல்லாப்பிள்ளையார் சிவனடியாரையுஞ் சிவலிங்கத்தையும் சிவனெனவேதேறி வழிபடுக என்றனுக்கிரகித்த மகாவாக்கியத்திலும், தெற்றென விளங்குகின்றது, உலகத்திலும் சிவனடியார்களுக்குச் "சரலிங்கம்" என்னும்பெயர் வழங்குதலானும் இவர்களுக்குச் செய்யுமாராதனை முதலியவைகளுக்கு "மகேஸ்வரபூஜை" என்றுவழங்குதலானும் யாவரும் எளிதின் உணரலாம். இவர்கள் சிவமேயானது எதனாலெனின், சிவசத்தியின்ஸ்வரூபமாகிய விபூதியை யணிந்தும், அவருடைய வடிவைஉணர்ந்தும் உருத்திராக்ஷத்தைச் சதாதரித்தும் வாசனமலத்தைப் போக்குதற்குரிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமகாமந்திரத்தை யுள்ளவாறுணர்ந்து செபித்தும் சிவபெருமானது "பகிர்யாக" அந்தர்யாக பூசைகளைச் செய்தும், சோகம்பாவனையால் "அவனே தானேயாகிய வந்நெறியாகியும் இருத்தலால் என்க.

இவர்களது மகிமையை அப்பர்சுவாமிகள் "குலம்பலம் பாவரு குண்டர் முன்னே" என்று திருவாய் மலர்ந்தருளிய பதிகத்து ஒவ்வொரு பாசுரத்திலும் "ஆரூரவார்சடையான் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" என்று உபதேசித்திருப்பதாலும் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்துள்.

"ஆரங்கண்டிகை வாடையுங் கந்தையே
பாரமீசன் பணியல தொன்றிலார்
யீரவன்பினர் யாதுங் குறைவிலார்
வீரமென்னால் விளம்புந்தகையதோ".

கேடுமாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடும்பணியிற் கும்பிடலேயன்றி
வீடும்வேண்டா விறலின் மிக்குளார் என்றும்.

ஸ்ரீ சுந்தரமூர்த்திச் சுவாமிகள், திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையாலும் அதிலும் "பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்" என்னும் பாசுரத்தாலும் யாவரும் எளிதினுரைக் கூறியிருக்கின்றார்கள்.

பின்னும் "ஹரதத்த சிவாசாரியர் "உலகத்தில் ஒருசாரார் ஞானத்தையேயடைய விரும்பி ஞானசாஸ்திரங்களையோதல், ஓதுவித்தல், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் என்று சொல்லப்படுகின்ற ஞானபாகங்களை யவலம்பிக்கின்றனர். மற்றொருசாரார், நித்திய கருமாதி சிவபூஜை முதலிய கிரியாபாகங்களை யவலம்பிக்கின்றனர். நாமோ அவ்விரண்டையுமெளிதிலடைய சிவபத்தர்களது பாதரட்சையையே யவலம்பிக்கின்றேம் என்னுங்கருத்துடைய (சுலோகம்.)

"ஞானவலம்பின: கேசித் கேசித் கர்மாவலம்பின ஹாவயந்து சிவபக்தானும் பாதரக்ஷாவலம்பின: என்று கூறியிருக்கின்றனர்.

வரும்.

டி. எஸ். தியாகராசஞானியார்
கமலாசினிப் பத்திராதிபர்
திருவாரூர்.

---

☞ இவ்வியாசம் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைப் புதுக்கட்டிடப்பிரவேச காலத்தில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தாபகரும் பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச்சாமி தேவரவர்கள் அக்கிராசனத்தின்கீழ். திருவாரூர் கமலாசினிப் பத்திராதிபர் டி. எஸ். தியாகராசஞானியார் அவர்கள் செய்த பிரசாரணம். (ப—ர்.)

உ
சிவமயம்.

# தமிழ்கற்கும் மாணவகர்களுக்கு

ஆரணியகாண்டம்.
கரன்வதைப்படலம் ககூஉ-ம் செய்யுள்

தம்பிதலை யற்றபடி யுந்தய ரதன்சே
யம்புபடை யைத்துணி படுத்தது மறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய குலக்கரி கடுப்பான்.

இதன்பொருள்—திரிசிரா தூடணன் என்னும் தம்பியர் இருவரின் தலைகள் அறுந்தொழிந்த வாற்றினையும் ஸ்ரீராமபாணம படைகளைத் துணிபடுத்ததையும் அறிந்து வெகுண்ட கரன் (இருமருங்கு முள்ள) மருப்புக்கள் தன்தலையினின்றும் பறிக்கப்பெற்றதொரு களிற்றினை நிகர்த்தான் என்பதாம்.

"தலையையுங்குறைத்தான்" என்றும், "நெடுந்தலையிழந்தான்" என்றும் கூறிப்போந்தமையின், அவைகட்கேற்ப ஒருமையீறாயினும், சாதிபற்றி அவ்விருதம்பியர் தலைகளும் எனப் பொருள்கோடலே பொருத்தமுடையது.

"எயிறுபடையாக" எனப் புறநானூற்றினும் (புறநானூறு—ரு-ம் செய்யுள்) "முந்துற்றிடுகரிதிண்டிறன் மொய்ம்பன்னிரதத்தைத், தந்தத்தொகை கொடுதாக்குபு" எனக்கந்தபுராணத்திலும், சான்றோர் களிற்றினுக்கு மருப்பினைப்படைக்கலம் என்று கூறுபவாகலின் அம்மருப்பினை இழந்தகரியினை நிகர்த்தான் எனவே தன்துணைவலி இன்றிநின்றமை பெறப்பட்டது.

"பொற்றைக்கயலிருந்த பூட்கைமுகன் துஞ்சியபின்
ஞெற்றைப்புயம்போ யுளந்தளர்ந்து வைகினன்யா
னிற்றைப்பகனீயிறந்தாயரிமுகனே
மற்றைப்புயமு மிழந்தேன் வறியேனே".

என்று சிங்கமுகன் இறந்தானெனக்கேட்டுச் சூரபன்மன் புலம்புமாற்றால், தம்பியரை இழத்தல், படைக்கலங்களை எந்தியும், அவையில்வழி, அப்படைக்கலங்கள் தாமேயாகியும் உற்றதுணையென உதவும் புயங்களை இழந்ததனேடொக்கும் என்பது அறியலாகும்.

படைக்கலமே போன்று உற்றுழிஉதவுதலின் அவயவங்களுட்சிறந்து விளங்கும் புயங்களை நிகர்க்கும் தம்பியரிருவரையும் ஸ்ரீராமர் கொன்று பறிப்ப, கின்றகரன் அவ்வாறாகிய இருமருங்கினுமுள்ள மருப்பினைப்பறிக்க, இழந்துநின்ற யானையினை நிகர்த்தான் (துணைவலியின்றி நின்றமையின்) என்பது நான்காமடியின் கருத்து.

கட்டல்—பறித்தல்.
"கட்டலே களைதல் குற்றல் பறித்தல்"

எனவரும் சூடாமணி நிகண்டையும் நோக்குக. களைக்கட்டல் என்பதனுனுமுணர்க.

குலக்கரி-வேண்டுமிலக்கணங்கள் அமையப் பெற்றதொருயானை.

"திருகு வெஞ்சினக் களிறனைய சீற்றத்தான்"
என யானை சீற்றத்திற்குவமையேயாயினும்.

மருப்புக்கள் பறிப்புண்டமைபோல, தம்பியரை இழந்தும் தன்பால் வந்துற்ற வலியின்மை நோக்கி அமைதலின்றி மீண்டும் வெகுண்டனனே! இவன்வீரமும் ஆற்றலும் இனிஎன்ன பயனைச்செய்யும் என்பார் "வெகுண்டான், கொம்புதலைகட்டிய குலக்கரி கடுப்பான்" என்றார்.

இவ்வாசிரியர்
"விராவருங்கடு வெள்ளெயிறிற்றபின்
அராவழன் றதனை யதன்னுற்றலான்"

எனப்பின்னரும் கூறுமாற்றானும் மேலது வலியுறுத்தப்பட்டது. இவ்வளவும் எமது உரை.

இச்செய்யுளுக்கு-"மருப்புதலையிற்கட்டின (தலையிற்படியப்பெற்ற) அஷ்டகஜங்களை ஒப்பாகிய கொதிக்கின்ற ஆயுதங்களோடு வில்லினைப்பற்றிய கையினையுடைய வெற்றிபொருந்திய கரன், தம்பியாகிய தூஷணனது தலையற்ற விதமும் சக்கிரவர்த்தி திருக்குமாரனது கணைகள் (அத்தூஷணனது) சேனைகளை அறுத்துத்தள்ளியதும் அறிந்துசினங்கொண்டான்" என்று உரை எழுதப்பட்டு அச்சிடப்பட்டிருக்கின்றது.

இனி எவையும் எவர்க்கும் புலப்படும்

இங்ஙனம்.
இ. குருஸ்வாமிக்குருக்கள்
முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை
கைதடிநகர்.

# கிறிஸ்துமத கண்டனம்.

ஸ்ரீசிவ. சங்கரபண்டிதராற் செய்யப்பட்டதும், ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவரால் வெளிப்படுத்தப்பட்டதுமாகிய கிறிஸ்துமதகண்டனம் கண்டனம். அதனை வியந்து சி. வை. தாமோதரம்பிள்ளை முதலியோர் கூறிய பாயிரங்களும் கண்டனம். இப்போது பாலசந்திரன் உ௰-ம் இல. பத்திரிகையிலே இடையிடையே வருங் கிறிஸ்துமத கண்டனசமாதானம் என்பதும்கண்டனம். அதனை அநுசரித்தெழுந்த குறிப்புரையுங் கண்டனம்.

இவையெல்லாம் கண்டும் என்னை! என்வினுக்களுக்கு விடையொன்றுங் கண்டிலம். அவ் வினுக்களுள்ளே சில வினுக்களை இங்கும் வினுவுவாம்.

க. கண்டனமாவது யாது? பூர்வபக்கத்தை அநுவாதஞ்செய்து தார்க்கிகக்கிரமந் தவறாது மறுத்துரைக்கு மதுவன்றி வேண்டியவாறெல்லாம் உரைத்துச்செல்லும் வெற்றுரையுங் கண்டனம் எனப்படுமோ?

உ. சமாதானமாவது யாது? சமாதானம் என்பது வடமொழியா? தென்மொழியா? உற்பத்தியாது? பொருள் என்னை? கண்டனம் என்பதற்கும் சமாதானம் என்பதற்கும் பொருளியைபு யாது?

ங. தடைவிடை என்பவற்றின் பொருள் என்னை? தொடைவிடை என்பவற்றின் பொருள் என்னை? பிரகரணம் என்பதன்பொருள் என்னை?.

இங்ஙனம்.

மு. பொன்னையா.

# தலயாத்திரைப் பொதுவிதி.

(கூ௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

வெண்மை! செம்மை! பொன்மை! வெண்கருமை முதலிய நிறங்களையுடைய வஸ்திரம் முறையே பிராமணர் முதலிய நால்வர்க்குந் தரித்தற்குரியது. சைவர்க்கு வெள்ளை வஸ்திரமே உரித்து புத்திரனில்லாத விதந்துவும் தீர்த்தத்தில் தர்ப்பணஞ் செய்யலாம்.

கன்னிகைகளுக்குப் பிதாவின் கோத்திரமும்! அவரது தர்ப்பணத்தும்! சிராத்தத்தும் கொள்ளல்வேண்டும்.

மாதா இருக்கும்பொழுது! பிதாமகிக்கும், பிதாவிருக்கும்பொழுது மாதாவுக்குந் தர்ப்பணம் இல்லை. மகளிர்க்குத் தர்ப்பணம் செய்யுங்கால் தாந்தாமாய் உச்சரிக்கவேண்டும்.

சிராத்தாங்க தர்ப்பணம் சில சாகிகட்கு உரித்து அத்தர்ப்பணம் தரிசச் சிரார்த்தத்தில் முதலினும், ஆப்திகத்து மறுநாளுதயத்து நட்சத்திரம் இருக்கும் பொழுதும், பட்சமுழுதும் செய்யும் மாளயத்தும், இரணியசிரார்த்தத்தும், சபிண்டிகரணச் சிரார்த்தத்தும் உடனேயும் செய்யப்படும். மறுநாட்செய்யுங்கால் ஸ்னானமானவுடன் சிராத்தத்தில் சேடித்த தில தருப்பைகளோடு செய்து சந்தியாவந்தனத்தின் பொருட்டுப் பின்னும் ஸ்னானஞ் செய்ய வேண்டும்.

நித்திய தர்ப்பணம் காருண்யபிதிர் சிரார்த்தத்தில் முன்னும், வருடச்சிரார்த்தத்தில் சிராத்தானந்தரம் வைசுவ தேவஞ் செய்து பின்னுஞ் செய்யும் பிரமயக்ஞத்திலும் திலமில்லாமல் செய்ய வேண்டும். பிரமயக்ஞஞ்செய்து வைசுவதேவஞ் செய்தலே சிட்டா சாரமென்பாருமுளர்.

இச்சாகிகளுக்குக் கயாச் சிரார்த்தத்தும், தீர்த்தச் சிராத்தத்தும் சிராத்தாங்க தர்ப்பணம் உண்டு.

தீர்த்தச் சிரார்த்தம்நைமித்திக மாதலின் அவர்க்கத்தர்ப்பணம் நைமித்திகச் சிரார்த்தாங்க தர்ப்பணம் எனப்படும். ஒருநாளிற் செய்யும் மாளய பட்ச சிராத்தத்தில் தர்ப்பணம் மறுநாளுதயஞ் செய்க.

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்

வண்ணார்பண்ணை.

## பெண்கள் கல்வி.

தனக்குரிய ரு அல்லது ரூ சிறிய குழந்தைகளைப் போற்றிவளர்த்தும், நோயினால் வருந்தியிருக்கும் தனது நாயகனுக்கும், எவருமற்ற தனது மாதுலற்கும் வேண்டியவற்றை வெறுப்பின்றிப் புரிந்து வருகின்ற ஒரு பெண்மணி சாதாரணமான உடையோடும், இன்முகத்தோடும் ஒரு விருந்துக்கு வந்து இன்சொற்களால் ஏனையரை மகிழ்வித்து, தனக்குற்றதுன்பங்களைக்குறிப்பு வகையினாலும் வெளிப்படுத்தாது இருப்பாளாயின், அவளே, கற்பாக்கினியிற்சுடப்பட்டொளிரும் பொன்னையொப்பாள். அவடனக் கணிகலமாவதும் அவள் பொறுமையேயாம்

மாதுலற்குச் செயற்பாலன

மன்னுசிவ பூசைக்கு வாய்ந்த பொருள் வழங்க, லின்னமிழ்தி னூண்டி யினிதுதவன்-முன்னின்று, பேசா தொழிதலிவை பேரன்பின்மாதுலற்குக், கூசா தியற்று பணிக்கூறு.

மாதுலன்மனைவிக்குச்செயற்பாலன

உடையுடம்பு சுத்த முறப்புரித லூண்டி, யிடுமமையம் பார்த்தாங் கிடுதல்— கடுமொழிகளேம முறவொழித்த லின்ன மருகிதன், மாமிக் கியற்றுபணி மற்று.

கணவற்குச்செயற்பாலன

இன்பம் விழையின் விதியி னினிதிழைத்த, றன்பதியி னேரறிந்து தானெழுக - றன்ப, நணுகிற் பொறுத்த னயவசன மாடல், பணிகணவற் கென்ப பரிந்து.

அடக்கமும் பொறுமையுமின்றி எப்பொழுதும் கோபக்குறிப்பினையே யுடையவளாய், எவரிடத்தும் எக்காலத்தும் எவ்விடத்தும் குற்றமேதெரிந்துகொண்டுகலாம்விளைக்கும் மனைவியே தன்நாயகனைப் பயப்பய எரிக்க அவனது போகூழால் விடுக்கப்பட்ட தொரு தகனசம்ஸ்காரக் கிரியாம்.

ஒவ்வொருவர் செய்கைகளினால், அவரவர் குணாகுணங்கள் அனுமானிக்கப்படுகின்றன. ஒருவன் தனது ஆக்கக்கேடுகளுக்கு, தானே காரணனாகின்றான். பிறராக்கம்கண்டு பொறாமை, அடக்கமின்மை முதலிய, தீய சிந்தனைகள் என்று சொல்லப்படும் ஆயுதசாலையிலே தன்னைக் கொல்லும் கருவிகளைத் தானே ஆய்ந்து தொடுக்கின்றான்.

பல்வேறுவகைப்பட்டு, எண்ணங்கள் தோன்றுமியல்புடையனவே யாயினும், அவைகளைச் சீர்தூக்கிப் பொறுமையோடு நின்று ஆராயும்பொருட்டு, அறிவினையே ஒருகாரணிகனாக நியமித்தல் வேண்டும். பொறுமை எனப்படும் சிங்காசனத்திற்றான் அறிவெனப்படும் காரணிகன் வீற்றிருப்பான். நம் எண்ணமே நம்மை இந்நிலையிற் கொண்டுவந்தது.

லலிதாம்பாள்.

மங்கையர்க்கரசி என்னும்

## கமலாம்பிகைசரித்திரம்.

(௧௧௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெண்:— ஏது தங்களுக்கு இன்றுமுகம் ஒருவாறாக விருக்கின்றது, உடம்பு குணமில்லைப் போலும்.

ஆடவன்:—விசேஷம் ஒன்றும் இல்லை சென்றஇரவு நல்ல நித்திரையில்லை அதனால் முகம் ஒரு மாதிரிகவிருக்கின்றது.

பெண்:—மந்தகாசம் செய்து ஆகா தூக்கம் எப்படி வரும் தாம் காமித்திருக்கும் கன்னிகாரத்தினத்தின் இன்பசுகத்தை அனுபவித்தபின்னர் தான் நல்ல நித்திரைவரும் அதுவரையில் உறக்கம் வாவென்றாலும் வாராதுதான், அதற்கென்ன சீக்கிரம் ஆகப்போகின்றது சேந்தாமரையாள் ஒன்று செய்யவேண்டுமென்று நினைத்தால் முடியாமற்போகுமா?

ஆடவன்:—பெண்ணே! நீஎப்பொழுதும் இப்படித்தான் பரிகாசம் செய்வது நான்உனக்குப் பரி

காசத்துக்காளல்ல எதுகாரியம் கெட்டுப்போயிற்று என்று சீறினான். (உலகத்திலே மாமியாருக்கும் மாமியார் உண்டு எல்லாரையும் அடக்கியாளும் இப்பெண்ணும் இவனுக்கு அடங்கினளென்றால், இதைவிட அதிசயம் வேறென்ன வி..க்கின்றது.

பெண்:—கார்த்தா! பரிகாசமென்ன அடியாள் உண்மையைத்தான் கூறினேன்.

ஆடவன்:—ஆமாய் எல்லாம் உண்மையான பேச்சுத்தான் பெண்ணே! நான் உன்னிடத்தில் ஒரு உதவிசெய்யும்படி கேட்டால் அந்த உதவியைச் செய்யக் கூடுமாக விருந்தால் செய்கிறது அல்லது முடியாதென உண்மையைச் சொல்லி விடுகிறதுதானே இதற்கு பரிகாசமெதற்கு சொல்லுகின்றேன் பொதுப்பெண்களைப்போலக் கேடுகெட்டவர்கள் உலகத்திலே இல்லை. அவர்கள் ஒருவருக்கு ஒரு உதவியும் செய்யமாட்டார்கள் காசின்மேலாசையுள்ள மோசசிந்தை குடிகொண்டவர்களாகவேயிருப்பார்கள். தம்மைவிரும்பப்பட்ட ஆடவர்களிடம் ஏதாவது பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தால் அடிக்கடி பல்லைக்காட்டிக் கண்ணைக் காட்டி காதுக்கினியவார்த்தைகளைக்கூறி மருட்டி வசீகரப்படுத்திப் பெற்றுக்கொள்வார்கள். அந்த நேரத்துக்கு வேண்டியதாக விருந்தாலும் ஆஹா! அதற்கென்ன அப்படியே செய்வோம் ஒரு நிமிஷத்திலே செய்துபோடுவோம் என்று சாதுரியமாகப் பேசிப்போடுவார்கள். ஆகையினால் பெண்ணே! நீயும் அவர்களைச் சேர்ந்தவளாதலினால் உன்னையும் குலக்குணம்பற்றி யிருக்கின்றது.

பெண்:—(மனவருத்த முடையவளாய்) பிரபோ! நீங்கள் சொன்னகருமத்தில் எதைச் செய்யாது விட்டேன் என்மீது தாங்கள் வெஞ்சினம் கொள்ளலாமா? எனக்கு நீங்கள் செய்தநன்றியை எக்காலத்தும் மறப்பேனோ நான் ஓர்பொதுப்பெண் என்பதை அரசனும் அரண்மனையுள்ளாரும் அறிந்தால் யாதாய்முடியும், அண்ணலே! நீங்கள் எடுத்தமுயற்சியும் இலகுவில் முற்றுமே, என்துரையே அடியாளைக் காத்தருளல் வேண்டும்.

ஆடவன்:—பெண்ணே! ஆலோசித்து வசனிப்பாய் உன்னை எனது சகோதரியென அரசனுக்குக்கூறி அவன் வசப்படுத்தியதுமன்றி "அரசகுமாரியை நான் தங்களுக்கு விவாகஞ் செய்துவைக்கின்றேன் என்னுடைய சமாசாரத்தை ஒருவருக்கும் கூறவேண்டாம்" என்று வேண்டிக்கொண்டமையினால் அல்லவா நான் இதுகாறும் தாமதித்திருந்தேன் இனிமேல் ஒருநிமிஷமும் பொறுக்கமாட்டேன் நீ இராசகுமாரியை விவாகஞ் செய்வித்துத் தருதல் வேண்டுமென நினைத்தால் காரியம் எளிதில் முற்றும். அதற்கு அத்தாட்சியாக நீகாலினாற் றேறியதை அரசன் நாவினால் அழிக்கின்றான். வீண்வார்த்தைகள் பேசுவதிற் பிரயோசனமில்லை. என்னை உனது உடன்பிறவாச் சகோதரனென்று மன்னவனுக்குச் சொல்லிய பின்புதானே அவனும் என்மீது அபிமானங்கொண்டு அரண்மனையில் உத்தியோகம் தந்திருக்கின்றனன். எப்படியோ அரசனிடம் கூறி விவாகத்தைச் சீக்கிரம் செய்வித்துப்போடல்வேண்டும். தெரிந்ததா?

வாசகனே!

இவ்வாறுசச் சம்பாஷித்திருந்த ஆடவனும் பெண்ணும் யாரென்றறியச் சொல்வோம் கேண்மின். பெண் வீரவிக்கிரம மகாராசனது பட்டத்துத்தேவியாகிய செங்கமலமே. ஆடவன் அவளது ஆசைநாயகனாகிய துஷ்டகேது என்பவனே. இவன்முன் செங்கமலத்தின் ஆசை நாயகனாயிருந்த ஒரு செட்டி, நாம்கூறியபடி இவளால் வசியமருந்திட்டு மயக்கப்பட்ட செல்வர்களில் இவனும் ஒருவன். இவன் எல்லாராலும் மதிக்கத்தக்க உயர்குடும்பத்தினனாயிருந்தும் கேவலம் சிற்றின்ப வசப்பட்டோனாய்ச் செங்கமலம் என்னும் இத்தாசிக்கே தன் திரவியங்களையெல்லாம் கொடுத்து வறுமையுற்றிருந்தனன். அவளும் இனிமேல் இவனிடம் பொருளில்லையெனக் கண்டு, பின் அவனுக்கு வஞ்சகம் செய்து கைவசமாயுள்ள திரவியங்களையும் கவர்ந்து கொண்டு ஓட்டப்பிடித்துத் தான்முன் பல்லோரிடமும் வாங்கிய பொருள் கொண்டு வனமாளிகையை அமைப்பித்து அந்தரங்கமாக அமர்ந்திருந்தனள். அப்பொழுதுதான் தன்மாயவலையை வீசி வீரவிக்கிரமனென்னும் மன்னவனை வசீகரப்படுத்தி அவனுக்கு மனையாளாய் வந்துற்றது.

"குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்".

என்றவாக்கியப்படி துஷ்டகேது என்பவன் அக்காலத்து யாதொருபற்றுக் கோடுமின்றி வறுமையாம் மனைவி வழித்துணைபற்ற அறிமுகமானோர் அருவருத்திகழ உண்ண உடுக்கத்தானும் வழியில்லாதவனாய் வீடுகடோறும் சென்று யாசித்துத்திரிந்தான். சிறிதுகாலஞ் சென்றபின், அந்நியதேசஞ்சென்று பெரும்பொருளீட்டிச் சீமானாய் வசித்த இவனின் மாதுலனொருவன் "அறிந்திடுபிச்சை கூவியிரப்போர் அரசரோடிருந்து அரசாளினுமாளுவர்" என்றபடி தனது பொருள்களையெல்லாம்

இவனுக்கேயாக்கி இறந்துவிட்டனன் இவன் அதன்பின்னாவது அப்பொருளை வைத்துக்கொண்டு எஞ்சியகாலத்தை நல்வழியிற் செலுத்துவோமென எண்ணினனா இல்லை! இல்லை!! தன்காதற் பரத்தையாகிய செங்கமலத்தின் ஆசைபிடர்பிடித்துந்த நெடுங்காலம் பல ஊர்கடோறும் தேடியலைந்து ஈற்றில் பக்ஷித்தடாகம் வந்து அங்கும் பல விடங்களிலும் தேடியலைந்து ஒருநாள் தற்செயலாக அரண்மனை மேன்மாடப் பாங்கரிலுள்ள வெளிப்புறச்சாலையில் இளந்தென்றலவாவுறும் விருப்பினளாய் மன்னவனோடு விளங்கும் மயிற்சாயலையுடைய செங்கமலத்தைத் தூரத்தேவரும் பொழுதுகண்டு ஆச்சரியமுடையவனாய் அவ்விடத்தை நோக்கிவருகின்றான்.

வரும்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

---

## கம்பராமாயண சிவபரத்துவம்.

உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில்சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்பது பெரியபுராணம்.

உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க் கேசரணாங்களே.

என்பது இராமாயணம்.

இக்கடவுள் வாழ்த்துக்கள் இரண்டனையும் நோக்குக.

முதன் மூன்றடிகளினும் ஆதியிலே நின்றபதங்களும் எதுகையும் பிறவும் பெரும்பான்மையும் ஒத்து நடக்கும் தன்மையுமுணர்க.

"அம்பலத்தாடுவான்" எனவே பஞ்சகிருத்திய நடனமென்பது பெறப்பட்டமையின், மறைத்தல் அருளல்களை முன்னைய மூன்றனுள் அடக்கி, காணப்படும் முத்தொழி னிகழ்ச்சிகாட்டி, இறைவனுண்மை விளக்கி, திருவடிகள் எனவும் புகல் எனவும் இருபொருள் பயப்பச் "சரண்" என்பதனைக்கோத்து அவ்விறைவனடி சேர்தலே விடுபேறென்பது புலப்படுத்தி "உலகெலாம்', என்னும் அப்பெரியபுராணத்திருவிருத்தத்தின் பொருளை விரிவுறக்கூறும் உரைநடையே போன்று விளங்கிநின்றமை உயர்த்துணர்தற்பாலது.

இன்னும் திருச்சிற்றம்பலமுடையார் அருமைத் திருவாக்கல் அடியெடுத்துக் கொடுத்தருள, யாக்கப்பட்டமையின். பிரணவமும் ஸ்ரீபஞ்சாக்ஷரமும் "அ இ உண்" என்னும் மாகேசுவர சூத்திரமும் தன்னுள் அமையநின்ற "உலகெலாம் என்னும் திருவிருத்தத்தின் தியான நலப்பயனுண்மை ஆசிரியர் கம்பர்க்கும் உண்டு என்பது, மேற்காட்டிய பிரணவம் முதலியவைகள் அமைந்து விளங்க அவர் வாக்கிலெழுந்த "உலகம்யாவையும்" என்னும் காப்பினால் அறிதலாகும்.

அம்பலத் தாடுவாரே, இக்காப்பின் பொருளாய் முடியும் என்பது, நான்காமடியில் அவரை அறியவேண்டும் தகரவித்தை தகரோபாசனைகளை ஞாபகஞ்செய்ய, "தோடுடையசெவியன்" என்புழிநிற்கும் தகரமேபோலத்தகரம் புணர்த்தினமையினால் நன்குவிளங்கும்.

## வைத்தியவிசாரம்.

(கூ௰அ-ம் பக்கத்தொடர்ச்சி.)

வைசூரி, இந்நோயினையுடையவர்களிலிருந்தாயினும், அவர்கள் ஆடைமுதலியவற்றிலிருந்தாயினும், அன்றி, இதின்பால் அசறு, தீண்டப்படுவதினாலாயினும் தோன்றும்.

பருக்கள் ஐதாதலும் ஒழுங்கினவாதலும் இளமையும் போலிவகைகளும் நயந்தரும் குணங்களுக்கேற்பனவாகும். பருக்கள் செறிந்திருப்பதும், அலட்டும், மூடத்தன்மையும் முதலியகுணங்கள் தோன்றுதலும் பருக்கள் அகன்று கருமைநிறமுடையனவாகி இடையிடையே கன்றியிடுந்தன்மை காணப்படுதலும், தோலின் செம்மைநிறம் விரைவிலே மாறி, வீக்கம்வடிந்து பருக்களிலே குழிவிழத் தேகம் வெளுப்புற்று, அதன்வலிகுன்றி, நாடி துடிப்புடன் நடந்து மூச்சுவிட வருத்தம் உண்டாதலும், பருக்கள் தோன்றுமுன் வாந்தி, கடுமையாய் உண்டாகி, அதன்பின்னும் நிற்பதும், சலம், வேர்வைமுதலிய நீர்களிலே உதிரம் காணப்படுதலும், கழுத்து சுவாசப்பை, குடல் இரைப்பை, சீரணஉறுப்புக்கள் ஆகிய இவைகளில் தாபிதம் உண்டாதலும், இவ்வுறுப்புக்களிலும் சந்துகளிலும் சீழ்கொள்ளுவதும், பிள்ளைமைப்பருவமும் முதுமைப்பருவமும் தீமைசெய்யும் குணங்களுக்கேற்பனவாகும்.

பதினோராம் பதினேழாம் நாட்களுக்கிடையில், 'இந்நோயினைப்பற்றிய முடிவு காணலாகும் எனினும் அதற்கு முன்னும் முதற்காய்ச்சலில் மரணம் வரினும் வரும். இரண்டாங் காய்ச்சலுடன் சிலகாலம் வயிற்றுப்போக்கும் உண்டாம்.

## சமாசாரம்.

உயிர்க்கொலைநீக்கம்:—சீவகாருண்யச்செயல் நம்நாட்டின்கண்ணே உள்ளசில ஆலயங்களில் உலகாசாரத்திற்கும் சாஸ்திர சம்மதத்திற்கும் மாறுக "வேள்வி" என்னும் ஒருகொண்டாட்டம் நடத்தி வாயில்லாச் சீவன்களாகிய ஆடு கோழிகளைவெட்டிப் பலியிட்டுவந்தார்கள். இவ்வருடம், சைவபரிபாலன சபையாருடைய விடாமுயற்சியினாலும் பல சைவப்பிரசாரகர்களுடைய பிரசங்கமுயற்சியினாலும் இக்கொடிய செய்கையைச் செய்தும் செய்வித்தும் வந்தகோயில் எசமானர்கள் இது மகாபாதகமென அறிந்து பரிதாபமுற்று இனிமேல் ஒருகாலத்தும் இக்கொடியசெயலைச் செய்வதில்லையென நிறுத்திவிட்டனர். பெருந்தொகையுயிர்கள் அகாலமரணமடையாமல் தப்பிவிட்டன. இவ்வேள்வியைச் செய்துவரும் மற்றைய கோயில் எசமானரும் இதைப் பின்பற்றி மகாபாதகத்தினின்றும் நீங்குவார்களாக.

தபால்கொடுக்கும் பெண்கள்:—இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும், தபால் கொடுக்கும் உத்தியோகத்தில். 4,000 பெண்கள் இருக்கிறார்களாம்.

80. தினஉபவாசம்:-டாக்டர் டானர்என்பவர், தமது 81 வது ஜனன வருடோற்சவத்தை நடத்தி, 80 தினங்கள் உபவாசமிருப்பதாகச் சங்கற்பஞ் செய்து கொண்டனராம்.

அமெரிக்காவில் 80 வயதுள்ள ஒருமாது, ஓர் கலாசாலையில் சேர்ந்து கல்விகற்க விரும்புகின்றனளாம்.

ஓர்புதியதராசு:— பளிங்கின் சம்பந்தமுடையதொருபொருளினால், செய்யப்பட்ட மயிரினை ஒத்த மெல்லிய இழைகளினால் சிறு தராசுக் கோலிலிருந்து ஒருதட்டு, கீழே தொங்கும்படி விடப்பட்டிருக்கின்றது. ஒரு அறையிலே இதற்கென்று வேறாக அமைக்கப்பட்டுள்ள ஒரு பெட்டியிலே இது வைக்கப்பட்டிருக்கின்றது அதுவைக்கப்பட்டிருக்கும் இடத்தினின்றும் கூ அடி தூரத்தில், அதன்நிறை அளவிடப்பட்ட கோ

ல் இருக்கின்றது. அந்தத்தராசிலே, வைக்கப்பட்டிருக்கின்ற ஒருசிறிய நிலைக்கண்ணாடியிலிருந்து ஓர் ஒளிவந்து அந்தநிறைகோலிலே அடிக்கும். அந்தத்தராசுக்கோல், எவ்வளவு மென்மையாக அசையினும், அந்தநிறைகோலில் அடிக்கும் ஒளியும் அதற்கேற்ப அசைவுற்று அளவினைக்குறித்துக்காட்டும். ஒருசிறிய கண்ணாடிக்குழாயிலிருந்து ஓர்விதவாயுவை எடுத்து நிறுத்துப் பார்த்தபொழுது, அது ஒரு அவுன்சில் 70-கோடியில் ஒருபாகம் நிறையுள்ளதென்று அத்தராசிலே காணப்பட்டது. இவ்வதிசயமான நுட்பமமைந்த தராசைக்கண்டுபிடித்தவர். ஸேர் வில்லியம் ராம்சே என்பவர்.

ஈக்கள்:—ஈ 20, 80, 320 முட்டைகளை ஒருமுறையில் இடுமாம்.

பறவைகளின் வேகமறியும்பந்திரம்—ஜேர்மனியிலே ராவிட்டன் பட்டணத்தில் பறவைகளின்வேகத்தை அளந்தறியும்படி ஒருஇடம் உண்டு. அதில், ஒன்பதுமாதங்களுள் இரண்டுநாரைகள் 6000 மைல் பறந்து போனதாகக் கணிதஞ்செய்யப்பட்டிருக்கின்றதாம்.

பழையசட்டையிற் பணம்:—ருஷியாவில் ஒருவன்வாங்கிய பழையசட்டை ஒன்றில், 3000 பவுண் மதிப்புள்ள நோட்டுக்களிருந்தனவாம்.

வித்தியாசாலை நன்கொடை:—ஹிஸ் ஹைனஸ் ஆகாகான் என்னும்வள்ளல், புனாபர்கூஸன்காலேஜிக்கு ரூபா ஐயாயிரம் நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றனர்.

வைத்தியத்திற் றேறிய ஓர்மாது:—மாகிப்பட்டணத்தில், மிஸ்டர் வி. கல்யாணியென்னும் ஓர்மாது வைத்தியபரீக்ஷையிற் சித்திபெற்றிருக்கின்றார்.

வித்தியாதானம்:—லண்டனிலே ஆறு கோடி ரூபா செலவுசெய்து சம்பளமின்றி சிறுவர்களுக்குக் கல்விகற்பிக்கப் போகின்றார்களாம்.

வறுமையும்நிலையில்லை —லண்டனிலே உணவிற்கும் வழியற்ற ஒருவனுக்கு உரிமையினால் இருபத்தினாலாயிரம் ரூபா வந்துசேர்ந்ததாம்.

ஓர்பாஷை:—எஸ் பிராண்டோவென்னும் ஒருபாஷை உலகில் வழங்கி வருகின்றது. அதனை இருபத்தினாலு மணிக்குள் கற்றுக்கொள்ளலாமாம்.

குற்றவாளிகளைத் தண்டிக்கும்யந்திரம் —குற்றவாளிகளை அடிப்பதற்கு ஒருயந்திரம் செய்யப்பட்டு, ஐரோப்பாவிலே உபயோகிக்கப்பட்டு வருகின்றது. குற்றவாளியை அந்தயந்திரத்திலுள்ள ஒருபஞ்சுமெத்தையிலே, இருத்திவிட்டால், அடிகளின் கணக்குத்தவறாமல், ஒரேசமமாய் அடித்து விடுகின்றதாம்.

கண்ணாடி அணிந்தகாகம்:—லண்டன் நகரிலே மிருகக்காட்சித் தோட்டத்தில், கண்பார்வை குறைவுள்ள ஒருகாகத்திற்கு, கண்தோல்சீறி எடுத்துச் சிகிச்சைசெய்து ஒருமூக்குக்கண்ணாடியும் போடப்பட்டது அதன்பின் எப்போதும் கண்ணாடி தரித்தபடியே இருக்கின்றதாம்.

இரட்டைத்தலைப்பாம்பு:—ஒரிஸாமாகாணத்தைச்சார்ந்தடால்கர் ராஜ்யத்திலே தோட்டமொன்றிலே இரண்டு தலையுள்ள ஒருபாம்பு பிடிக்கப்பட்டது. அதற்கு நாலுகண்களும், 2 வாய்களும், 2 நாக்குகளும் இருக்கின்றன பாம்பின் நீளம் 1 அடி 20 நாள் ஆகாரமின்றியும் வித்தியாசமின்றி இருக்கின்றதாம்.

ஓர் ஆதனவழக்கம்:— இமாலயபருவதத்தின் சாரலிலே தாரிஸ் என்னும் ஒருவகைச்சாதியார் உளர். அவர்களுள் மூத்தபிள்ளைக்கு விவாகம் நடக்கும் பொழுது அப்பிள்ளையின் தாய். தனது சுண்டுவிரலை

அறுத்து, காளிக்குப்பலியிடும் வழக்கம் இன்றுமுள்ளதாம். செல்வர்கள் பொன்னாலொரு சுண்டுவிரல் செய்து காணிக்கை கொடுப்பினும் சரியாம்.

௩௨0. புத்திர பௌத்திரர்களை யுடைய ஒருமாது:—டிரான்ஸ்வாவிலே, கிரான்ஸடாட், என்னும் ஊரிலே வான் ஓய்க் கென்னுமொருமாது, ௧௮௯௨ ௵ அக்டோபர் ௴ ௨௨ பிறந்தவர். இவர் ௧௮ வயதில், பீட்ரஸ் ஜேகோபஸ் லப்பீ என்பவரை மணமுடித்து, இரண்டு ௵ பின் ஒருகுழந்தைபிறந்தது. அவர் இறந்துபோனார். பின், ௧0 ௴ விதவையாக இருந்து, நான்கு குழந்தை யுள்ளவரும், மனைவியிழந்திருந்தவருமாகிய நிக்கொலஸ் மார்த்தினஸ் பிரிடோரியஸ் என்பவரை மணஞ்செய்து, ஒருவருடமும் ஐந்து மாதமும் செல்ல, அவர், தனது ஐந்து குழந்தைகளையும் விட்டு இறந்தார். பின் ௫ மாதம் விதவையாயிருந்து, ஏழு குழந்தைகளையுடைய டேவிட் ஸ்டீபானஸ் பீடர்ஸ் என்பவரை மணஞ்செய்து. ௧௧ ௵ வாழ்ந்து ௭ குழந்தைகளைப் பெற்றனர். அவரும் இறந்துபோனபின், ஒருவருடம் விதவையாயிருந்து, ௮. குழந்தைகளையுடைய டானிலாட் பிவிகஸ் கிரான்ஜி என்பவரை மணமுடித்து ௪ பிள்ளைகளைப் பெற்று ௧௧ வருடம் வாழ்ந்துவந்தார். அவரும் இறந்தபின், ௨ வருடம் விதவை யாயிருந்து, ௫. குழந்தைகளை யுடைய கோன்ராட் ஹெனரிக் லான் ஓய்க்கென்பவரை, மணமுடித்து, ௪ குழந்தைகளைப் பெற்று ௧௧ ௵ வாழ்ந்திருந்தனர் பின் அவரும் இறந்தார். இவ்வாற்றால் நேரே ௨௬ பிள்ளைகளும், மணஞ்செய்த புருஷர்களுக்கு ௨௪ பிள்ளைகளும், ஆக ௫0, பிள்ளைகளும், அவர்களால் ௨௭0. பௌத்திர பௌத்திரிகளும் இருக்கின்றார்களாம். இப்பொழுது அம்மாது ௭௮ வயதுடன் இருக்கின்றனராம்.

நரமாம்சபக்ஷணம்:—அட்மிராலிட்டித்தீவுகளில், நரமாமிசபோசனம் மிகுந்து வருகின்றதாம்.

மூன்றுகுழந்தை:—திருநெல்வேலியில், ஒரு பிரசவத்தில் ஒரு ஆணும், இரண்டு பெண்ணுமாக. மூன்று குழந்தைகள் பிறந்தன.

தென்னைமரத்திலே வாழைமரம்:—வங்காளம். பட்லேகிராமத்தில், இஸ்மேல்ஷேக் என்பருடைய வீட்டிற்கு எதிரில், ௨0 முழ முயரமுடைய ஒரு தென்னைமரம் இருக்கின்றதாம். அதில் வாழைக்குலையும், அதன் நுனியிலே இளநீரும், வெளிப்பட்டிருக்கின்றன.

கோதாவரிசில்லாவிலே, மங்கம்மாள் என்னு ஒருபாதகி, ஒரு பிள்ளையைக் கொன்று புதைக்கும்பொழுது பிடிக்கப்பட்டு, மெசாஸ், நீதிபதி பென்சன், நீதிபதி சுந்தா ஐயர் அவர்கள் முன்னிலையில் விளங்கப்பட்டு. தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது.

வண்ணை வயித்தீஸ்வரன்கோயில்:—இதில் மகோத்சவம் நடைபெறுகின்றது. ௸ ஆதீனகர்த்தர். ஸ்ரீமான். க பொன்னுச்சாமிச்செட்டியாரவர்களை நடப்பித்து வருகின்றமையினால் குறித்த காலங்களில் கிரமமாக உற்சவம் நடத்தப்படுகின்றது.

மங்கையர்க்கரசி வித்தியாசாலைப் பரிசளிப்பு:—வித்தியாசாலையில் கல்விகற்கும் பிள்ளைகளுக்கு இந்தமாசம் ௮௨ சனிக்கிழமை இரவு உபகாரங்கொடுக்கப்பட்டது. அப்பொழுது ஆனரபிள் ஸ்ரீமான் அ. கனகசபைப்பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

ஓர் புதிய பத்திரிகை:—"கலியுகவரதன்" என்னும் பெயருடன் ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை ஸ்ரீ சு. மாணிக்கம்பிள்ளை அவர்களால் திருமகள் விலாச அச்சுக்கூடத்திலிருந்து. விரோதிகிருது ௵ வைகாசி ௴ விசாகம் தொடக்கமாக வெளிப்படுத்தப்படுமென அறிகின்றேம்.

ஐரோப்பியபெண்களின் விற்பனை:—ஐரோப்பிய பெண்களின் விற்பனையைப்பற்றிப் பம்பாய்பிஷப்சிலதினங்களுக்கு முன்னே பேசினாரென்று தெரிகிறது அவர் ஸ்பெயின் போர்ச்சுகல் போன்ற சிறிய தேசங்களில் கூட ஐரோப்பியச் சிறுமிகளைத் திருட்டுத்தனமாய்ச் சிற்றின்ப விஷயத்திற்கு விற்பது சாத்தியமாகாமற் போகும்படி சட்டதிட்டங்கள் செய்யப்பட்டிருக்கும் போது இந்நாட்டில் மட்டும் அச்சிறுமிகள் திருட்டுத்தனமாய் விஷய சுகத்துக்காக விற்கப்படுவதைத்தடுக்க வழிஏற

படாமல் இருப்பது விசனிக்கத்தக்கதென்றும், இந்நாட்டிலே கவர்ன்மென்டாருக்கு அம்மாதிரி திருட்டுத்தனமானவிற்பனை நடவாதிருப்பதற்குள்ள வழிகளைத்தேட அதிகாரம் இருக்கின்றதென்றும் சொன்னார் பொதுஜனங்கள் அம்மாதிரி சட்டஞ் செய்யப்படுவதில் தங்களுக்கு இஷ்டமிருப்பதாய்க் காட்டிக்கொள்ள வேண்டுமென்றார். [நா—நீ—னி.]

---

# THE
## *Hindu Calender*

யாழ்ப்பாணம்.

ஸ்ரீமத். சு. சதாசிவக்குருக்களவர்களால்

## ஆங்கில பாஷையில்,

கணிக்கப்பட்ட

## புதியதொரு பஞ்சாங்கம்.

இது விரோதிகிருது வருஷத்திற்காகப் பெரும்பான்மையும் வாக்கியமுறையினையே அநுசரித்து, கணிக்கப்பட்டு, ஆங்கிலபாஷையிலே வெளிப்படுத்தப் பட்டுளது. யாழ்ப்பாணத்திலே வழங்கிவரும் பஞ்சாங்கங்களிற் காணப்படும் விஷயங்கள் யாவும் அமைக்கப்பட்டுள்ளன. திதிவாரம் நக்ஷத்திரம், யோகம், கரணம், இராகுகாலம், முதலியவைகளும், சோதிட பரிபாஷாபதங்களும். அவ்வவற்றிற்குரியனவாய் எற்புழிவேண்டும் பிரதிபதங்கள் தந்து ஆங்கிலபாஷையிலே பெயர்த்துக்காட்டி, விளங்கவைத்துச்செல்லும் நுட்பமும் ஆயுந்தோறும் இனிமை பயவாநிற்கும்.

அரை, கால், அரைக்கால், வீசம். முதலியவைகளைக் குறிப்பஇடப்படும் அடையாளங்களின் விளக்கங்கள், எவர்க்கும் மிக உபயோகமாகும்.

பல்லிசொற்பலன், இராசிவிளக்கம், கிரகநிலைகளின் பலாபலன்கள் முதலாயுள்ளன, சுருக்கமாக, ஆங்கிலபாஷையிலே முடித்துக்காட்டும் போக்கும், சித்திரை முதல், பன்னிரண்டு மாதங்களுக்கும் தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம் கரணம் தியாச்சியம் உதயாத்பரம் பகல்மானம் விரதாதிகள் கிரகங்களின் பெயர்சி முதலியனவாக, வேண்டுவனயாவும் தமிழ்ப்பஞ்சாங்கங்களிற்போல தனித்தனி அவ்வவற்றிற்காக விடப்பட்டுள்ள இடங்களிலே அமைக்கப்பட்டுப் புலப்படுத்தும் சாதுரியமும் சென்ற அறுபதுவருடங்களுக்கும் இங்லீசு ஆண்டுகள் குறிப்பிக்கப்பட்டிருக்கும் பிரயோசனமும் எவராலும் பாராட்டப்படுதற்குரியனவாகும்.

கைவிசேஷம் விவாகம் முதலியவற்றிற்குச் சுபமுகூர்த்தங்கள் மணி மினிட் காட்டி வரையறைசெய்யப்பட்டிருப்பதும் உத்தியோக விண்ணப்பபத்திரம் அனுப்புதற்கு முகூர்த்தநிச்சயம் செய்யப்பட்டிருக்குமதுவு. இவைபோல்வன பிறவும், இன்றியமையாதனவேயாகும்.

இவ்வாற்றால் தமிழ்முறையினைத்தழுவி, ஆங்கிலேய பாஷையிலே இப்பஞ்சாங்கம் இயற்றப்பட்டமையினால், அப்பாஷாப்பியாசமுடையயோர் தாமே பார்த்து நிச்சயித்துக்கொள்ள இதனினும் சிறந்த கருவி வேறில்லை இத்துணைச்சிறந்த இப்புதிய பஞ்சாங்கத்தை ஆங்கிலேய பாஷையிலே முதன்முதல் இயற்றியவர் யாழ்ப்பாணம் இந்துக்காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும், சைவபரிபாலனசபைச் சைவப்பிரசாரகருமாகிய, ஸ்ரீ க. சுப்பையரவர்கள் புதல்வர் தந்தையறிவு மகன் அறிவு என்றபடி இவரும், வடமொழி தென்மொழிகளிலும், ஆங்கிலத்திலும் வேண்டிய அளவு பயிற்சியுடையவர். சோதிடநூற்றுறைகளிலும் ஆருடத்திலும் மாந்திரிக சாஸ்திரங்களிலும் சித்தியும் லோகப்பிரசித்தியுமுடையவர். இந்நூல், நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது எமது ஆபீசிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை சதம் ௫௰.

இதனை அனுப்பிய ஆக்கியோனுக்குத் துதிகூறுகின்றோம்.

அசாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

# அவுஷதம்.

## கஸ்தூரிதிராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒருஒயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர் அழிவினால் தாங்க முடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். ௪௦-நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்க வாய்வு துர்நடத்தையால் ஆண்மை பலமற்று சையோகம்செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூச துஜஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று மூளை பலவீனம், ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு; நாட்சென்றபிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்தமருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம் வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம்வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு, மகோதரம்; காய்ச்சல் கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்கு கைகண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ. ௧௦. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற் செலவு பிரத்தியேகம்.

## துஜ்ஜிபங்கதைலம்.

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலகாலைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பெலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய், இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரி சையோகத்தால் அநேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விருவகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரிதிராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி ௪௪-தினத்துக்குள் வியாதி சுகப்படும். ௨௧-நாள்த்தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவேரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ ௨. அணா ௮. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்திற்கு விற்பனைசெய்துவருகிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனாற் சாஸ்திரப்படி அதிக பொருள்செலவழித்துச்செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே. இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒருகுளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. ௧௨-குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். ௧௨-குளிகைகளின் விலை ரூபா ௨. தபாற்செலவு அணா ௪.

சாப்பிடும்விதம்—சையோகஞ்செய்ய அரைமணித்தியாலத்துக்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காய்ச்சியபசுப்பாலில் கற்கண்டுபோட்டுக்குடித்தால் இந்திரியம் இளகாது இளகவேணுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

கெங்காதரர் தைலம்:—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை அவுன்சு ரூபா ௫.

மகாநாராயண தைலம்:—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்குக் கைகண்டது. ௧ அவுன்சு ரூபா ௧. மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

## மிருத்துச்சீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை.

எட்டுவிதமான சுரத்துக்கும், அசுத்தசலத்தினால் கொசுமுதலான விஷசெந்துக்களினாலுண்டாகும்

மலேரியா ஆதிய விஷக்காச்சல்களுக்கும்; கஅ-விதமான சன்னிக்கும் இதில் ஒ மாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகமாகும். எழுவேளைசாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். கஉ குளிகையின் விலை ரூபா இரண்டு.

### காமனீமது பஞ்சனீ மாத்திரை.

இது தங்கம்; அபரக்பஸ்பம்; கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம் முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது இதன் சொற்பகுணத்தைமட்டும் காட்டுகிறேன். நீரிழிவு காசம் இருமல் ஈளை தீராதவாதரோகம் பிறமேகம் மூலக்கூடு புதிதாய்க்காணும் அண்டவாதம் வெள்ளைமுதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். மூன்றுநாளில் நல்லகுணந்தெரியும். சச-நாளில் வியாதி பூரணசுத்தமாகும். காலை மாலை கச-நாள் சாப்பிடக்கூடிய உஅ-மாத்திரைகளின் விலை ரூபா ரு. சச-நாள் சாப்பிடக்கூடிய அஅ-மாத்திரைகள் எடுத்தால் ரூபா கரு-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

### சந்திரிக்கா பிரதம மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுந்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு பீன்சக்கபாலம் துர்ஸ்திரீ கமனத்தாலுண்டான நோய்கள் வெண்குட்டம் நீரழிவு போகத்தாலுண்டான நோய்களையெல்லாந் தீர்க்கும். இம்மாத்திரையை உக-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். சச--குளிகையின்விலை ரூபா மூன்றரை.

### புத்தகங்கள்.

பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானிடர் எவரும் இகபரநன்மைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போற் போதிக்கக்கூடிய மெத்த அருமையானபுத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்காரநடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளா லியற்றப்பட்டு வாசிப்போருக்கு இன்பத்தையும் மனோற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள்தான் இருக்கின்றன. காலதாமஞ் செய்யவேண்டாம்.

க. கோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி ரூபா ௩
உ. கலிக்கோ ,, ச
௩. தைத்தொழிற்போதினி மாபிள்கட்டு ,, க-அ
கலிக்கோக்கட்டு ,, உ
ச. பூலோகௌஷதோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம்சங்கியை க-க்கு அணா ம
ரு. அனேக இங்கிலீஷ்சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணா கஉ
சு. சோகன்லால் சரித்திரம் ,, அணா அ
எ. இன்ஸ்பெக்டர் ஸீபுசாய்புசரித்திரம் அணா கஉ
அ. ஷை சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூ. க-ச
கூ. ரூசியயப்பானியயுத்தம் இருபகுதிகள் ஒருரூபா
ம. இரசமணிசெய்யும் புத்தகம் (அ பக்கம்) ரூ. க-அ

மேற்காட்டியவைகள் வேண்டுவோருக்கு தாமதமின்றிச் சாக்கிரதையோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்குக் காட்லாக்கை யெடுப்பித்துப்பார்க்கவும். இனாமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களைவாங்கி, தினமும்மகிழ்வடையுங்கள்.

எமது விலாசம்.

மகாராஜ கேங்காபிரசாத் பண்டிதர்
மருதானை முதலாம் டிவிசன் No. 74.
கொழும்பு.

---

## அரியபிரதிமைப்படம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம் *(Portrait)* எமது ஞானப்பிரகாச ஆபீசிலும், வண். கிழக்கு நாஷனல் ஸ்ரோர் எஸ். வீ. எஸ். வீராச்சாமிப்பிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீமான். எஸ். கே. (மேட்றன்) கனகரெத்தினம் அவர்களால் அமைக்கப்பட்டது.

---

*Printed and published by the Proprietor A. Sanmugaretna Sarma at the Genasa Press, Jaffna,*